**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 12.11.2025**

**அரசு தரப்பு சாட்சி** : 16 (LW33)

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயபாலன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது திருப்புல்லானி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021 ல் மண்டல மாணிக்கம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 30.07.2021 ம் தேதி கமுதி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி, மண்டலமாணிக்கம் காவல் நிலைய குற்ற எண்.139/2021, பிரிவுகள் 147, 148, 341, 323, 324, 427, 302 IPC வழக்கில் இராமநாதபுரம் மாவட்ட கமுதி தாலுகா, கீழகாக்காகுளத்தை சேர்ந்த முத்துராமு மகன் இறந்த நபர் கருப்பையா, கமுதி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக பகல் 12.00 மணிக்கு வேண்டுதல் கடிதம் பெற்று, கமுதி அரசு மருத்துவமனை மருத்துவரிடம்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:29 +0530

கடிதத்தை கொடுத்து, பிரேதத்தை பரிசோதனை செய்ய பகல் 12.15 மணிக்கு கமுதி அரசு மருத்துவமனை மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காண்பித்து, பிரேத பரிசோதனைக்குப்பின் பிரேதத்தை நல்லடக்கம் செய்ய அவரது மனைவி வளர்மதியிடம் பிரேதத்தை ஒப்படைத்தேன். பின்னர் சவக்கிடங்கில் கைப்பற்றப்பட்ட அவர் உடுத்தியிருந்த காப்பி கலர் கட்டம் போட்ட லுங்கி ஒன்றும், ரோஸ் கலர் கட்டம் போட்ட சட்டை ஒன்றும் கைப்பற்றி 30.07.2021ம் தேதி மாலை 17.00 மணிக்கு வட்ட காவல் ஆய்வாளர் அவர்களிடம் காவல் நிலையத்திற்கு சென்று ஒப்படைத்தேன். நான் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்த இறந்த நபர் உடுத்தியிருந்த **காப்பி கலர் கட்டம் போட்ட லுங்கி மற்றும் ரோஸ் கலர் கட்டம் போட்ட சட்டை** ஆகியவை தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படுபவைதான். அவை **சா.பொ.13 மற்றும் சா.பொ.14** முறையே குறியீடு செய்யப்படுகின்றன. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனக்கு ஆய்வாளர் வாய்மொழி உத்தரவு கொடுத்தாரா அல்லது எழுத்துமூல உத்தரவு வழங்கினாரா என்றால் கடவுச்சீட்டு மூலம் உத்தரவு வழங்கினார். அந்த கடவுச்சீட்டில் என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல, எனக்குத் தெரியும். அந்த கடவுச்சீட்டில் இறந்துபோன நபரின் பெயர் மற்றும் விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். அந்த கடவுச்சீட்டினை விசாரணையின்போது ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். இது போன்ற பணிகள் எனக்கு அயல்பணியா அல்லது வழக்கமான பணியா என்றால் நான் அன்றைய தினம் காவல் நிலைய பணியில் இருந்ததால் என்னை அனுப்பினார். உயர் அதிகாரி என்ன பணி கொடுத்தாலும் நான் அதை செய்வேன் என்றால் சரிதான்.

இறந்துபோன நபரை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. அவரது உடலை அடையாளம் காட்டுவதற்கு அவரது உறவினர்கள்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:32 +0530

யாரேனும் அழைத்து சென்றேனா என்றால் அனுமதி இல்லை என்பதால் அழைத்து போகவில்லை. கைலி மற்றும் சட்டையை பிரேத பரிசோதனை முடிந்த பின்னர் கைப்பற்றினேன். கைலி மற்றும் சட்டையை நான் கைப்பற்றியபோது அங்கிருந்த நபர்களிடம் கையொப்பம் எதுவும் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை.

நான் எனது முதன்மை விசாரணையில் சொன்ன விவரங்களை எனது மேல் அதிகாரி கேட்டுக்கொண்டதன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.12 18:11:34 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .